# மேட்டுர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 53/2023 | Date : 15.04.2025 | PW 1 |
|---|---|---|
| Name: சீனிவாசன் | த/பெ. அய்யண்ணன் | |

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 மற்றும் 3 பிரதிவாதிகளை பொறுத்து நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 1 ஆம் பிரதிவாதி 3 ஆம் நபர்களுக்கு தாவா சொத்தை விற்கும் பட்சத்தில் மேற்படி ஆவணத்தை பதிவு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். 1 ஆம் பிரதிவாதி எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். தாவா சொத்தை பொறுத்து எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட தனிப்பட்ட குடும்ப தகராறுக்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆவணத்தை பதிவு செய்யக்கூடாது என்று தடங்கல் மனு ஏதாவது 3 ஆம் பிரதிவாதியிடம் நான் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி தடங்கல் மனுவை எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை. மேற்படி தடங்கல் மனுவின் நகல் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் தடங்கல் மனு ஏதும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக தடங்கல் மனு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளை பொறுத்து சரியான ஆவணங்களை தகுந்த நீதிமன்ற கட்டணத்துடன் வில்லங்க விவரங்கள் சரிபார்த்து பதிவிற்காக தாக்கல் செய்யும் பட்சத்தில் மேற்படி ஆவணங்களை பதிவுசெய்யும் கடமை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள குடும்ப தகராறுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தேவையில்லாமல் அவர்களை அலைக்கழிக்கும் நோக்கத்தோடு வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

ஒம்/—சீனிவாசன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.